**சிரம வாசனா நிதியம் - 2015**

-----------------------------------------

சிரம வாசனா நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சிரம வாசனா நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஆண்டின் வருமானத்திற்கு எதிராக அதற்காக செலவிடப்பட்ட செலவினங்களைக் கழித்து இலாபம் கணக்கிடப்பட வேண்டிய போதிலும், எழுதுகருவிகள் தொடர்பாக ஆண்டிற்குரிய செலவினம் குறிப்பாக இனங்காணப்படாமல் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி, செலவினமாக இனங்காணும் கொள்கை தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டிருந்தது.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா சொத்துக்கள் அதன் கொண்டு செல்லும் பெறுமதியில் காண்பிப்பதற்காக மீள்மதிப்பீடு செய்து மீண்டும் புத்தகங்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2015 யூலை 29 மற்றும் 30 ஆந் திகதிகளில் தொழில் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடை படிகள் தொடர்பான செயலமர்விற்கு ரூபா 60,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அத்தொகை செலவிடப்பட்ட விதத்தை உறுதிப்படுத்துக்கூடிய ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா அதிகாரச் சட்டம் (உ) | |
| i. 13(1) ஆம் பிரிவு | ஒவ்வொரு ஆண்டின் போதும் நடாத்தப்பட வேண்டிய சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் லொத்தர்களின் வகை தொடர்பாக சிரம வாசனா நிதியம் மற்றும் லொத்தர் சபை என்பற்றுக்கு இடையே இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்கவில்லை. |
| ii. 13(2) ஆம் பிரிவு | வழங்கப்படுகின்ற பரிசுகள் தொடர்பாகவும் உரித்துக் கோரப்படாத பரிசுகள் தொடர்பாகவும் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் நிதியம் மற்றும் லொத்தர் சபை என்பற்றுக்கு இடையே |

| | | |
|---|---|---|
| | | இணக்கப்பாடொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| iii. | 13 (3) ஆம் பிரிவு | லொத்தர் மூலம் கிடைக்கப்பெறும் பணம், வழங்கப்படும் பரிசுகளின் பெறுமதி மற்றும் லொத்தரினை நடாத்துவதற்கான செலவினம் சம்பந்தமாக லொத்தர் சபை மற்றும் நிதியத்திற்கிடையே இணங்கப்படும் அளவு தொடர்பாக இணக்கப்பாடொன்று கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 18 வரையிலும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 772 | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 316,690 கூட்டுத்தொகையான கிரயமுடைய 09 சொத்துக்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 35 பொருள் உருப்படிகளுக்குரிய 88 பொருள் அலகுகள் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 38,493,632 மிகையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 39,281,320 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 787,688 ஆன குறைவொன்று காணப்பட்டது. நிர்வாகச் செலவினம் ரூபா 1,236,776 ஆலும் பெறுமானத்தேய்வு ரூபா 282,085 ஆலும் அதிகரித்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் அதிகரிப்பொன்று காண்பித்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் பணிக்கொடை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்கான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகளைக் கருத்திற் கொள்ளும் போது நிதியத்தின் மொத்தப் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 59,967,312, ரூபா 43,994,166 மற்றும் ரூபா 43,946,767 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது கூடிய பங்களிப்பொன்றைச் காட்டியிருந்த போதிலும் பின்னைய ஆண்டுகளில் அதே மட்டத்தில் பேணிச்செல்வதற்கு முடியாதிருந்தமைக்கான காரணங்கள் மற்றும் அதனை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களாக

- ஊழியர் சேமலாப நலன்புரி மேம்பாட்டிற்காக

- சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் முன்அறிவித்தலொன்று இல்லாமல் மூடப்பட்ட சந்தர்ப்பமொன்றில் அந்த ஊழியர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்
- அவசர சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்
- ஊழியர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்கும் போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்
- அனர்த்த சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கோ அல்லது அவர்களின் தங்கியிருப்போருக்கு நிதி மற்றும் ஏனைய நலன்களை வழங்குதல், மற்றும்
- ஊழியர்களின் நலன்புரிக்காக சிறந்த சேவைகளை வழங்கியுள்ள நபர்களுக்கு விருதுகளை வழங்குதல் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.

அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளை பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(அ) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 13,450,000 தொகை செலவு செய்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 07 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 20 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

| **தொடர் இலக்கம்** | **நிகழ்ச்சித்திட்டம்** | **ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா)** | **செலவிடப்பட்ட தொகை (ரூபா)** | **இலக்கு** | **முன்னேற்றம்** | **சதவீதம் (நூற்றுக்கு)** |
|---|---|---|---|---|---|---|
| i. | நலனாளிகளுக்கு இழப்பீடு வழங்குதல் | 500,000 | 50,000 | 10 | 02 | 20 |
| ii. | தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 300,000 | 10,000 | 10 | 05 | 50 |
| iii. | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 500,000 | 50,000 | 20 | 05 | 25 |
| iv. | புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் | 6,500,000 | 6,400,000 | 100 | 95 | 95 |
| v. | விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,400,000 | 800,000 | 30 | 13 | 43 |
| vi. | ஒழுங்கமைப்பு இயலளவினை பலப்படுத்தல் | 500,000 | 120,000 | 20 | 08 | 40 |

**(இ) கண் மருத்துவ சிகிச்சை மற்றும் மூக்குக் கண்ணாடி பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஊழியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 505,800 பெறுமதியான 562 மூக்குக் கண்ணாடிகளுக்குரிய பகிர்ந்தளிக்கும் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், நோயாளிகளின் சிகிச்சைகளுக்கான வருகைப் பதிவேட்டின் பிரகாரம் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்திய 21 நலனாளிகளும் ஊழியர்கள் அல்ல என்பது கண்டறியப்பட்டது.

ii. மஹறவையிலும் நிக்கவரட்டியவிலும் நடாத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களுக்கு ரூபா 928,235 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்காக வருகை தந்த நபர்களின் எண்ணிக்கை, அங்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 910 மூக்கு கண்ணாடிகள் மற்றும் எஞ்சிய 48 மூக்குக் கண்ணாடிகள் தொடர்பாக உறுதிப்படுத்தக்கூடிய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) வாரியபொலவில் நடைபெற்ற வலுவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1,153,214 தொகை செலவு செய்து தச்சு தொழில், கொத்தனார் மற்றும் அழகுக்கலை ஆகிய 3 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், நலனாளிகளை அங்கீகரிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அவர்களிடையே உபகரணத் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. ஊழியர்களுக்கு நலன்களை வழங்கும் நோக்கத்தின் கீழ் நலனாளிகளைத் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நலனாளிகளை இனங்கண்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) சட்ட உதவிகளுக்காக ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த ரூபா 180,000 தொகை 2016 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு 2014 ஆம் ஆண்டிலும் 2015 ஆம் ஆண்டின் முதல் மாதங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 78,239 பெறுமதியான 7 உருப்படிகள் 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விருப்புக்கள் இருப்புப் பதிவேடுகளில் இருந்த போதிலும் அவ்வாறான இருப்பொன்று பௌதீக ரீதியாக காணப்படவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) சிரம வாசனா அதிகாரச்சட்டத்தின் 06 (அ) முதல் (ஊ) வரையான நிதியத்தை தாபித்ததன் நோக்கங்களுக்கு முரணாக நினைவுச் சின்னங்கள், மேடை நாடகங்கள் மற்றும் பல்வேறு வகையான போட்டிகளுக்காக அனுசரணை வழங்குவதற்காக ரூபா 1,623,670 ஆன செலவினம் நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி தொழிலாளர் அமைச்சு வளவில் நடாத்தப்பட்ட சீல சமாதான நிகழ்ச்சித்திற்கு பௌத்த கொடிகள் மற்றும் பெனர்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 8,260 தொகை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே சீல சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அன்னதானம் வழங்குவதற்கு ரூபா

100,000 தொகை செலவாகியுள்ள சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக மே தினக் கூட்டமொன்றில் பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 125,000 செலவில் தொப்பிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், முன்னால் தலைவரின் ஆலோசணையின் பிரகாரம் அவசர தேவையொன்றாக கருதி குருணாகல் பிரதேசத்தின் நிறுவனங்களிலிருந்து மாத்திரம் விலை விபரங்கள் கோரி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 13 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினர் 10 ஆக இருந்தமையால் 3 பேருக்கான பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. அவ்வெற்றிடங்கள் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாக தாக்கமளிக்கவில்லெயென தென்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் போதியளவு ஊழியர்கள் இல்லாமை அதற்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்குமிடையே காணப்படும் பாரியளவு விலகல்களைக் குறைத்து பாதீடானது கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிய முகாமைத்துவம் | - | லொத்தர் விற்பனையில் இருந்து கிடைக்கும் பங்களிப்பு திறைசேரியிடமிருந்து நாளாந்தம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | செயலாற்றல் | - | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | - | நிறுவகத்தின் கொள்வனவு இருப்பு பதிவேடுகளில் பதிவுசெய்தல் மற்றும் அப்பதிவேடுகளை நாளதுவரையாக்கல் இடம்பெற்றிருக்கவில்லை. |